# ஆயுத கொள்வனவு; வெளிநாடுகளுடன் ஒப்பந்தம்

(கொழும்பு) 1994ம் ஆண்டில் இலங்கைப் படையினருக்கு தேவையான பெருமளவு இராணுவ தளபாடங்களை வெளிநாடுகளிலும் வெளிநாட்டு ஆயுத நிறுவனங்களிடமிருந்தும் பெற அரசு அவற்றுடன் ஒப்பந்தம் செய்யவுள்ளதாக செய்திகள் கூறுகின்றன.

1994ம் ஆண்டிற்கு தேவையான சகல வகையான இராணுவ தளபாடங்களையும் பெருமளவில் கொள்வனவு செய்வதற்கு தரைப்படைத்

(4-ஆம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆவணி 28 இதழ் 208
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 13 — 9 — 1993

## ஏழாலை வடக்கில் பொம்மர் தாக்கு

(யாழ்ப்பாணம்) ஏழாலை வடக்கு பகுதியில் நேற்று பிற்பகல் நடைபெற்ற விமானக்குண்டுத்தாக்குதலில் 4 வீடுகள் பலத்த சேதமடைந்தன.

நேற்று பிற்பகல் 2-30 மணியிலிருந்து 3-00மணிவரை இரு பொம்மர்கள் பலத்த குண்டுத் தாக்குதலை நடாத்தியுள்ளன. 4 தடவைகள் வீசப்பட்ட

(4-ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கையில் படுகொலைகளை விசாரிக்க ஆணைக் குழு நியமிக்குக

## 'தினேஷ்' கோரிக்கை

(கொழும்பு)

**இலங்கையில் கடந்த காலங்களில் இடம்பெற்ற படுகொலைகள் பற்றிய உண்மைகளை வெளியே கொண்டுவருவதற்கு "லோ ஏசியா" சம்மேளனம் ஆணைக்குழு ஒன்றை நியமிக்க வேண்டுமென மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் திரு. தினேஷ் குணவர்த்தன கோரிக்கை விடுத்துள்ளார்.**

பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் "லோ ஏசியா" மாநாட்டிலேயே திரு. தினேஷ் குணவர்த்தன இக்கோரிக்கையை விடுத்தார்.

ஆசிய நாடுகளைச் சேர்ந்த பல பிரதிநிதிகள் கலந்து கொண்ட இம்மாநாட்டில் அவர் மேலும் பேசுகையில்:

பயங்கரவாதம் என்ற போர்வையில் படுகொலை செய்யப்பட்டவர்கள் பற்றி நீதியின் பெயராலும் சமாதானத்தின் பெயராலும் இந்த ஆணைக் குழு விசாரணை நடாத்த வேண்டும் எனவும் தெரிவித்தார். (ம-சி)

## கடல் எல்லை ஒப்பந்தத்தில் இந்தியா இலங்கை கைச்சாத்து

(சென்னை) இலங்கையும் இந்தியாவும் கடல் எல்லை ஒப்பந்தம் ஒன்றைச் செய்துள்ளதாக இந்திய கடற்படைத்தளபதி அட்மிரல் எல். ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

கடல் வாணிபத்தையும், எல்லைகளையும் பாதுகாக்கும் நோக்குடனேயே மேற்படி இரு நாடுகளும் இந்த ஒப்பந்தத்தை செய்து கொண்டதாகவும், இவ் ஒப்பந்தத்திற்கான நோக்கத்தை நிறைவேற்றும்

(4-ம் பக்கம் பார்க்க)

## புலிகளின் தற்கொலைப் படை தமிழக சிறையை தாக்கலாம்

(சென்னை) தமிழகத்தில் பலத்த காவல் போடப்பட்டிருக்கும் பூந்தமல்லிச் சிறைச்சாலையை விடுதலைப்புலிகளின் தற்கொலைப்படை தாக்கலாமென தகவல் கிடைத்துள்ளதாம்.

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டிருக்கும் பல முக்கிய கைதிகள் மேற்படி பூந்தமல்லி சிறைச்சாலையில் பலத்த பாதுகாவலின் மத்தியில் வைக்கப்பட்டுள்ளனர்.

(4-ஆம் பக்கம் பார்க்க)

## 150க்கும் மேற்பட்ட புலிகள் கொழும்புக்குள் ஊடுருவலாம்

### படையினர் உஷார் நிலையில்

(கொழும்பு) கொழும்பிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் கடந்த மூன்று வாரத்தினுள் 150ற்கும் மேற்பட்ட தீவிர புலிகள் உறுப்பினர்கள் ஊடுருவியிருப்பதாக புலனாய்வு துறையினர் எச்சரித்துள்ளனர்.

கொழும்பில் ஏதாவது பாரிய தாக்குதலை நடாத்தும் நோக்குடன் இவர்கள் இப்பகுதியில் ஊடுருவியிருக்கலாமென இராணுவ வட்டாரங்கள் எச்சரித்திருப்பதுடன் நகரின் சகல பகுதியிலும் படையினர் முழு அளவில் உஷார் படுத்தப்பட்டுள்ளனர்.

கடந்த மூன்று வாரத்தினுள் வடக்கு - கிழக்கிலிருந்து நகரினுள் ஊடுருவியிருக்கும் 150 புலிகளும் சகல துறைகளிலும் பயிற்சி பெற்றவர்களாக இருக்கக் கூடுமெனவும் புல

(4-ம் பக்கம் பார்க்க)

## நள்ளிரவு நேரத்தில் கொழும்பில் தேடுதல்

(கொழும்பு) கொழும்பிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் கடந்த வெள்ளிக்கிழமையும் நேற்று முன்தினம் சனிக்கிழமையும் நள்ளிரவு நேரத்தில் பலத்த தேடுதல்வேட்டை நடாத்தப்பட்டு பல தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனராம்.

(4-ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் இராணுவம் மூதூரில் மோதல்

(மூதூர்) மூதூர் காட்டுப் பகுதியில் நேற்று முன்தினம் காலை கனரக வாகனங்களுடன் ஷெல் தாக்குதலை மேற்கொண்டவாறு முன்னேற முற்பட்ட படையினரை நோக்கி விடுதலைப்புலிகள் கடும் தாக்குதலை தொடுத்தனர்.

(4-ஆம் பக்கம் பார்க்க)

## சந்திரசேகரன் பதவி இழந்தார்?

(கொழும்பு) மத்திய மாகாண சபைக்கு தெரிவு செய்யப்பட்ட மலையக மக்கள் முன்னணித் தலைவர் திரு. பி. சந்திரசேகரன் தமது உறுப்பினர் பதவியை இழந்துவிட்டதாக கூறப்படுகிறது.

இம்மாதம் 10ம் திகதிக்கு முன் அவர் மேற்படி மாகாண சபையில் சத்தியப்பிரமாணம் செய்திருக்க வேண்டும் இல்லாவிடில் அவரது தெரிவு செல்லுபடியற்றதாகும்.

எனினும் சந்திரசேகரன் மாகாணசபை சென்று சத்தியப் பிரமாணம் செய்ய அனுமதிக்கப்படவில்லை என்றும் கூறப்படுகிறது. (வி)

## குழந்தைகள் பிறப்பு விகிதம் இலங்கையில் குறைகிறது

(கொழும்பு) தென்கிழக்காசிய நாடுகளில் இலங்கையில் குழந்தைகளின் பிறப்பு விகிதம் குறைந்து வருகின்றது.

1993 ஆம் ஆண்டு உலக மக்கள் அபிவிருத்தி நிறுவனத்தின் அறிக்கையிலே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கை 22 வீதம் இந்தியா 30 வீதம் பங்களாதேஷ் 30

(4-ம் பக்கம் பார்க்க)

## நாட்டில் சமாதான முயற்சிகள் பயனற்றுப் போயின

(கொழும்பு) இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்த 'சர்வதேச விழிப்பு' அமைப்பு பல முயற்சிகளை ஏற்கனவே மேற்கொண்டிருந்ததாகவும் அது சாத்தியப்படவில்லை எனவும் அதன் பொதுச்செயலர் கலாநிதி குமார் ரூபசிங்க தெரி

(4ம் பக்கம் பார்க்க)

## மலையகத்தினு புலிகள் ஊடுருவல்

(கொழும்பு) மலையகத்தில் புலிகளின் ஊடுருவல் அண்மைக்காலமாக அதிகரித்து வருவதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கிழக்கு மாகாணத்திலிருந்து பொலனறுவை காட்டினூடாக பதுளைக்குள் புலிகள் ஊடுருவி அங்கிருந்து ஏனைய பகுதிகளுக்குச் சென்றிருக்கிறார்களாம்.

இதையடுத்து அண்மைக் காலமாக ஊவா மாகாணத்தில் படையினரின் கண்காணிப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் சந்தேகத்திற்கிடமானோர் கைது செய்யப்பட்டு வருவதாகவும் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (வி)

## வரி விளம்பரம்

**செல்வம் ஆட்ஸ் சுன்னாகம்**

றபர் சீல்-விளம்பர போட்-நம்பர் பிளேட்-பிளாஸ்ரிக் நம்பர் பிளேட் பாடசாலைச் சின்னங்கள் - புலொக் டிசைன் தயாரிப்பாளர். (இ-459)

**வகுப்புக்கள் ஆரம்பம்**

9, 10, 11-ம் ஆண்டுக்கான கட்டாய பாடமாகிய கணித பாடம் அவர்களின் தரம் அறிந்து கற்பிக்கப்படும். தொடர்புகொள்ளவேண்டிய முகவரி: இல, 5 டேவிற்வீதி, யாழ்ப்பாணம். (இ-455)

**வியாபாரிகளுக்கு**

நூல், லேஸ், சில்வர், கோல்ட் கவறிங் மற்றும் அழகுசாதனப் பொருட்கள் மொத்தமாகப் பெற்றுக்கொள்ளலாம். ஜெயா அழகு சாதன மாளிகை, 177A, மின்சாரநிலையவீதி, யாழ்ப்பாணம். (எ-3400)

**சில்வா வாச்வேக்ஸ்**

எமது நிறுவனத்தில் மணிக்கூடுகளை திருத்த கொடுத்தவர்கள் அதற்கான ரசீதுகளை இடம் பெயர்வுகாரணமாக தவறவிட்டிருந்தால், தகுந்த ஆதாரம்காட்டி அவற்றைப் பெற்றுக் கொள்ளுமாறு வேண்டுகிறோம். ஞானமுத்து அன்னை வேளாங்கண்ணி 15-ம் ஒழுங்கை மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி- 3412)

**போத்தல்கள் தேவை**

ஹொர்லிக்ஸ், வீவா போத்தல்கள் மூடியுடனும், ஜாம் சோஸ்பியர் மற்றும் சோடா பவர் போத்தல்கள் எம்மால் கொள்வனவு செய்யப்படும். விற்க விரும்புவோர் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:- ரேஸ்ற் லைன் இன்டஸ்றீஸ் (தனி) லிமிட், 14, சீனிவாசி ஒழுங்கை, யாழ்ப்பாணம். (ஏ-3416)

## முதுதமிழ் புலவர் மு. நல்லதம்பி

அசை, சீர், தளை, அடி, தொடை ஆகிய செய்யுளுறுப்புக்கள் நிரம்பினவாய் சந்தம், ஓசை, பொருள்நயம் என்பவற்றோடு அரிய பாடல்களையும், இலக்கிய நூல்களையும், சிறுவர் கதைகளுஞ் இயங்களையும் கண்டோர் மனதுக்கு விருப்பத் தக்க வகையிலே மனதுக்கினிய பெருங்குணத்தனாய் தெள்ளிதாய்த் தந்தவர் வட்டுக்கோட்டை வரைச் சேர்ந்த முதுதமிழ்ப் புலவர் மு. நல்லதம்பியாவார்.

இவரது நூல்களில் இளைஞர் விருந்து, மணித்தாய் நாடும் மரதன் ஓட்டமும், இயற்கை விவசாயம் (திருத்திய பதிப்பு) நளமணி வாசகம், பாலபோதினி, ஞாயிறு செய்தித்தாள், கட்டுரைகள், கணவர்க்கினியராம் கற்பரசி, ரா. பி. சேதுப்பிள்ளையின் நூலின் உரைநடைச் சிலம்பு பாகம் 1, ஆருயிர் தந்த அருட்பெறலாளி பாகம் 2, என்பன சிறப்பிற்குரியவை, இவற்றிலே பல பாடநூல்கள் தமிழ்மாணவ சமுதாயத்திற்கு பாட நூல்களாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. அச்சிடப்படாத நூல்கள் வெண்பாவிடுதூது, தரும புத்திர நாடக நாட்டுக்கூத்தின் சில பாடல்கள் என்பனவாகும்.

இவரது பாவன்மையையும் நாவன்மையையும் போற்றி

(4ம் பக்கம் பார்க்க)

**ST. JOHN'S COLLEGE, JAFFNA.**

## ஆண்டுப் பரிசளிப்பு விழா அழைப்பு

காலம்: — 18-9-1993
நேரம்: — காலை 9-30 மணி
இடம்: — பீற்றோ ஞாபகார்த்த மண்டபம்

பிரதம அதிதிகள் :

**அருட் கலாநிதி எஸ். ஜெபநேசன்**
(யாழ். பேராயர், தென் இந்திய திருச்சபை)

**திருமதி விமலா ஜெபநேசன்**

பெற்றோர், பழைய மாணவர், நண்பர் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர்.

(ஏ-3417)

## மீசாலையில் தையல் நிலையம் செ.சிலுவை திறந்துவைப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க மீசாலை கிழக்கு அலுவலகத்தில் தையல் நிலையம் ஒன்று அப்பகுதி மக்கள் நன்மை கருதி திறந்துவைக்கப்பட்டுள்ளது.

சுயதொழில் வாய்ப்பை ஊக்குவிக்கும் விதமாக இந் நிலையம் திறக்கப்பட்டுள்ளது. இலங்கை செஞ்சிலுவைச்சங்க யாழ். கிளையால் நடாத்தப்பட்ட தையல் பயிற்சித் திட்டத்தில் சித்தியடைந்த மாணவிகள் இதன் மூலம் பயன் பெற்று வருகின்றனர் எனறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## சுழிபுரம் விக்ரோறியாவில் மனைப் பொருளியல் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டப் பாடசாலைகளின் மனைப்பொருளியல் கண்காட்சி இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு சுழிபுரம் விக்டோறியாக் கல்லூரியில் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. த. துரைசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

மனைப்பொருளியல் உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி இ. சண்முகரத்தினம் இக்கண்காட்சியைத் திறந்து வைப்பார். கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியின் முன்னாள் அதிபர் செல்வி ச. சின்னப்பு சிறப்புரையாற்றுவார்.

மனைப்பொருளியல் வினா, விடை, நூல் வெளியீடு கலை நிகழ்ச்சிகள் ஆகியனவும் இடம்பெறும். இக்கண்காட்சி இன்றும் நாளையும் சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரியிலும். 16-ம், 17-ம் திகதிகளில் யூனியன் கல்லூரியிலும் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. -ரி

## முதுதமிழுலகின் முதுதமிழ்ப் புலவர் மு. நல்லதம்பி அவர்கள் நினைவு தினம்



13-09-1896 08-05-1951

ஈழநாடே கேள்... (புலவரது பாடல்)

வளத்திலே சிறந்து நின்றாய் ஈழநாடே — கண்டார்
வாழ்விலே உயர்ந்து நின்றாய் ஈழநாடே
உலத்தினைக் களிக்க வைக்கும் ஈழநாடே — இன்றேன்
உணர்வு சோரும் மக்களின்றாய் ஈழநாடே.

செழுமை கொண்ட நிலமமைந்த ஈழநாடே —
பிறரைத்
தேடி நீ இரப்பதென்ன ஈழநாடே
உழவிலே சிறந்து நின்ற ஈழநாடே — இந்நாலி
ஊணிலாது வாட லென்ன ஈழநாடே.

வேறு

செங்குலக் கோட்டனும் வன்னிமைச் செல்வரும்
செய்த பணிகள் சிறியனவோ — தமிழ்
மங்கையு மாரிய மன்னனு மீந்த
வளங்கள் விழுத்திடும் பான்மையவோ.

சோழர் குருதியும் பாண்டியன் சேரியும்
தோய்ந்து கிடந்ததிந் நாட்டினிலே
ஆழநினைந்து நன்னாரிவஞ் சிறந்து பண்
பாரா வினவிருவக் பேருறவே.

முதுதமிழ்ப் புலவர் நூல் வெளியீட்டுப் பேரவை.

(சி-456)

## யாழ். பல்கலைக்கழக பட்டமளிப்பு வைபவம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தின் 13-வது பட்டமளிப்பு வைபவம் கைலாசபதி கலையரங்கில் துணை வேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா தலைமையில் மூன்று அமர்வுகளில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

மேள, நாதஸ்வர வாத்தியங்கள் ஒலிக்க, பட்டுக்குடை ஆலவட்டங்கள் சகிதம் துணை வேந்தர் பட்டமளிப்பு அரங்கிற்கு அழைத்துவரப்பட்டார்.

முதலாவது அமர்வில் முதுமெய்யியல்மாணி, முதுகலைமாணி பட்டப்பின் தகைமைச் சான்றிதழ், மருத்துவ சத்திர சிகிச்சைமாணி, சித்த மருத்துவ சத்திர சிகிச்சைமாணி, வர்த்தகமாணி ஆகிய கற்கைநெறிகளில் பட்டம் பெற்ற 246 பட்டதாரிகளுக்கு பட்டங்கள் வழங்கப்பட்டன.

இரண்டாவது அமர்வில் கலாநிதி, விஞ்ஞானம், முதுவிஞ்ஞானமாணி, தொழில் நிர்வாகமாணி ஆகிய துறைகளில் பட்டம் பெற்ற 189 பட்டதாரிகளுக்கு பட்டங்கள் வழங்கப்பட்டன.

மூன்றாவது அமர்வில் கலாநிதி, கலைமாணி, இசைக்கலைமாணி, நடனக்கலைமாணி ஆகியவற்றில் பட்டம் பெற்ற 209 பட்டதாரிகளுக்குப் பட்டங்கள் வழங்கப்பட்டன.

இந்தப் பட்டமளிப்பு வைபவத்தில் நேரில் கலந்துகொள்

(3-ஆம் பக்கம் பார்க்க)

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



**திருமதி வைரமுத்து வள்ளிப்பிள்ளை**

தோற்றம்: 1907-4-10 மறைவு: 1993-08-15

நேர்வழி நின்று எமையெல்லாம் நெறிப்படுத்தி வாழ்ந்து இறைவனடி சேர்ந்த உங்கள் ஆத்மா சாந்தியடைய வேண்டுகிறோம்.

நாளை 14-9-93 செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டியிலும், வீட்டுக்கிரியையிலும், மதியபோசனத்திலும் பங்குகொண்டு சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர் நண்பர்கள் யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

மகன், மருமகள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

சுதுமலை, அச்சுவேலி. (இ-457)

**மணிவாக்கு**

"உண்மைகளை புறக்கணித்து விடுவதால் அவை உண்மைகளாக இல்லாமல் போய் விடுவதில்லை".
ஆல்டஸ் ஹக்ஸ்லி.

# வடக்கு-கிழக்கு யுத்தத்தினால் ராணுவ இழப்பு அதிகரிக்கிறது

## சிங்கள மக்கள் கவலை

(கொழும்பு)

வடக்கு கிழக்கு யுத்தம் காரணமாக பெரும் தொகையான பணம் விரயமாவதுடன் சிங்கள இளைஞர்களின் உயிரையும் அரசு விணுக்கவிகொடுத்து வருவதாக சிங்கள மக்களின் ஒரு பகுதியினர் கவலை தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதி டி. பி. விஜயதுங்கா, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா உட்பட பல அரசியல் தலைவர்களுக்கும் இது தொடர்பாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இராணுவ நடவடிக்கை என்று தம்பட்டமடித்துக் கொண்டு பெருமளவு பணத்தையும் அப்பாவிச் சிங்கள இளைஞர்களின் உயிரையும் அரசு விரயம் செய்கின்றதே தவிர உறுதியான வெற்றி எதனையும் போரில் பெற முடியாத நிலை காணப்படுகிறது.

நாட்டின் அபிவிருத்திக்கு வழங்கப்படும் வெளிநாட்டுக் கடன்களில் பெரும் பகுதியும் இன்று யுத்தத்திற்கே செலவிடப்படுகிறது. இந்நிலை தொடருமாயின் பெரும் அபாய விளைவுகளே நாட்டுக்கு ஏற்படும் என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

மேலும் தொடரும் யுத்தத்தினால் இராணுவம் மற்றும் படைகளிலுள்ள சிங்கள உயர் தளபதிகளையும் அதிகாரிகளையும் பலிகொடுத்து வருவதால் ஆட்சியாளருக்கு பெரும் பின்னடைவு ஏற்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (நி)

**யாழ். பல்கலைக்கழக**

(2ம் பக்கத் தொடர்ச்சி)

வாக 147 பட்டதாரி மாணவர்களுக்கும் பட்டங்கள் வழங்கப்பட்டன.

இந்த வைபவத்தில் நிரஞ்சனி சவரிமுத்து, சந்திரயா குணராஜா ஆகிய இருவருக்கும் கௌரவப் பட்டங்கள் வழங்கப்பட்டன. (162.ரி)

## நமது நோக்கு

### மீனவர் வேதனை!

கரையோரப் பகுதியில் வாழும் மீனவர்களுக்கான நிவாரணம் கடந்த மூன்று மாதங்களாக நிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இராணுவ நடவடிக்கைகளினால் பெரிதும் பாதிக்கப்பட்டவர்கள் மீனவர்களே. இராணுவ ஆக்கிரமிப்புக் காரணமாக இடம் பெயர்ந்து, தொழில் இழந்து இவர்கள் வாடி வதங்குகிறார்கள்.

கடற் படையினரின் கெடுபிடிகளால், வள்ளங்களை இழந்தும், வலைகளை இழந்தும், சுடப்பட்டும் பல நெருக்கடிகளைச் சந்தித்து வந்தனர்.

கடற்பிராந்தியத்தில் இருந்து கரையோரங்களை நோக்கிய எறிகணை வீச்சுகளால் பாதிக்கப்படுபவர்களும் இவர்களே.

இதனால் கடலுக்குச் சென்றவர்கள் தொழிலைக் கைவிட்டு, உயிரைக் காப்பாற்ற வீடு திரும்பும் நிலை அடிக்கடி ஏற்படுகின்றது.

இதைவிட, மீன்பிடித் தொழிலை நவீனமயப்படுத்தவும், பயிற்சிகள் பல பெற்றிடவும், கடந்த பத்தாண்டு காலமாக மீன்பிடிப் பயிற்சிக் கல்லூரி யாழ்ப்பாணத்தில் இயங்கி வந்தது.

வெறும் ஏட்டுக் கல்வி நாட்டுக்கு உதவாது; தொழிற் பயிற்சிகளை ஊக்குவிக்க வேண்டும் எனத் தேசிய மேடைகளில் பேசும் அமைச்சர்கள், நடைமுறையில் தொழிற்கல்வியைத் தமிழர்களுக்கு தடைசெய்கிறார்களே என்ற எண்ணத்தை உருவாக்கும் உத்தரவு ஒன்று அண்மையில் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றது.

இம் மாதம் முதல் மீன்பிடிப் பயிற்சிக் கல்லூரியை மூடி விடும்படி கடற்றொழில் அமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

போக்குவரத்துத் தடை, பொருளாதாரத் தடைக்கு மேலதிகமாக தொழிற்கல்வித் தடையும் அமுலுக்கு வந்துவிட்டது.

தற்போது, மன்னார் முதல் திருமலை வரையிலான வடக்குப் பகுதி தடைப் பிராந்தியமாக்கப்பட்டுள்ளது. மீன்பிடி வள்ளங்களின் நடமாட்டம் முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது.

விளைவு என்ன? மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டு வந்த சுமார் ஒரு லட்சம் குடும்பங்கள் ஜீவனோபாயமின்றித் தவிக்கிறார்கள்.

அரசு அவர்களுக்கு தகுந்த நிவாரணம் வழங்கும் பொறுப்பை தட்டிக்கழிக்க முடியாது!

# இந்திய மாநிலங்களில் பாதுகாப்பு அதிகரிப்பு

## குண்டு வெடிப்பு காரணமாம்

(புதுடில்லி)

புதுடில்லியில் இளைஞர் காங்கிரஸ் அலுவலகத்துக்கு வெளியே நேற்றுமுன்தினம் இடம்பெற்ற குண்டுவெடிப்பை அடுத்து இந்தியாவிலுள்ள அனைத்து மாநிலங்களிலும் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

இக்குண்டுவெடிப்பு தொடர்பாக பாதுகாப்புத்துறை அதிகாரிகள், உயர் பொலிஸ் அதிகாரிகள், அரசு அதிகாரிகள் போன்றவர்களை உள்ளடக்கிய மாநாடு ஒன்றைக்கூட்டி உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் ஆராய்ந்தார்.

இம்மாநாட்டை அடுத்துப் புதுடில்லியில் பாதுகாப்பைப் பலப்படுத்துமாறு காவல் துறை ஆணையாளருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்தக் குண்டுவெடிப்புச் சம்பவம் குறித்து சிறப்புப் புலனாய்வுப் பிரிவு விசாரணைகள் நடத்தவுள்ளதாகவும் இதற்காக விசேட விசாரணைக்குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இக்குண்டு வெடிப்புச் சம்பவத்தை கேள்வியுற்ற பிரதமர் நரசிம்மராவ் அதிர்ச்சியையும், கண்டனத்தையும் வெளியிட்டுள்ளார். இந்தக் கொடூர நிகழ்ச்சியை அவர் வன்மையாக கண்டித்துள்ளார். இதே வேளை இந்தியாவிலுள்ள அனைத்துக் கட்சிகளும் இக்குண்டு வெடிப்பைக் கண்டித்து அறிக்கை வெளியிட்டுள்ளன. -ரி

# அறவழி ஆசிரியர்கள் கல்வி கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

அறவழிப் பாலர் ஆசிரியர்களுக்கான மூன்றுநாள் கல்விக்கருத்தரங்கு இம்மாதம் 17-ம், 18-ம் 19-ம் திகதிகளில் அறவழிப் போராட்டக்குழுவின் பணிமனையில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் பாடசாலை நிர்வாகம், பாலர்களுக்கான கல்விப் போதனை, ஆசிரியர்களின் செயற்பாடு, பெற்றோர் ஆசிரியர் உறவு, குழந்தைகளின் ஆற்றல்களை இனம்காணுதல் போன்ற தலைப்புகளிலும் விரிவுரைகளும் செய்முறைகளும் நடத்தப்படவுள்ளன.

வடமராட்சி, வலிகாமம், தென்மராட்சி பகுதிகளிலிருந்து அறுபது பாலர் பாடசாலை ஆசிரியர்கள் இக்கருத்தரங்கில் கலந்து கொள்கின்றனர். இதற்கான ஏற்பாடுகளை செயலாளர் திரு. க. ஜீவகதாஸ் மேற்கொண்டு வருகிறார். (ரி)

### கதிர் இயக்கம் மூலம் எலும்பு முறிவுக்கு சிகிச்சை

(மியூனிச்)

எலும்பு முறிவையும் கதிர் இயக்கம் மூலம் குணப்படுத்துவதில் ஜெர்மனியில் மியூனிச் நகர டாக்டர்கள் வெற்றி கண்டுள்ளனர்.

சிறுநீரகத்தில் ஏற்படும் கல் அடைசலை, லேசர் கதிர் இயக்கம் மூலம், கல்லை உடைத்து கரைப்பது போன்று, எலும்பு முறிவுகளையும் கதிர் இயக்க சக்தி மூலம் குணப்படுத்தலாம் என கண்டறியப்பட்டுள்ளது. (கே-ர)

## நெருக்கடி நிலையிலும் ——

# யாழ்ப்பாணத்தில் போராட்ட உணர்வு வளர்ந்து வருகிறது

(லண்டன்)

வடபகுதி மக்கள் மூன்று வருடங்களாக போர்ச்சூழ்நிலையில் வாழ்ந்து சகல செல்வங்களையும் இழந்து உயிருக்கு போராடிக்கொண்டிருக்கிறார்கள் என்று யாழ்ப்பாணம் விஜயம் செய்த வெளிநாட்டு பத்திரிகையாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

தொடரும் போரினால் வடபகுதி மக்கள் அடிப்படை வசதியற்ற நிலையில் வாழ்ந்து வருகிறார்கள். இடிந்த கட்டிடங்களுடன் எலும்பும் தோலுமாக உள்ள மனிதர்களுடனும் யாழ்ப்பாணம் காட்சியளிக்கிறது. கடந்த மூன்று வருடங்களாக மக்கள் படும் கஷ்டம் எழுத்திலடங்காது.

போக்குவரத்து சேவை சீர்குலைந்துள்ளதால் போக்குவரத்திற்கு துவிச்சக்கரவண்டியையே மக்கள் பாவித்து வருகிறார்கள். அரச அலுவலகங்கள், வங்கிகள் தனியார் நிறுவனங்களில் கடமையாற்றுபவர்கள் தமது மாதாந்த சம்பளத்தை எடுத்து குடும்பத்தை சமாளிக்க முடியாது திண்டாடுகின்றனர்.

இதேபோன்று விவசாயிகள் மற்றும் தொழிலாளர்கள் குடும்பங்களும் பெரும் கஷ்டத்தை எதிர்நோக்கியுள்ளன. அரச ஊழியர்கள் பயணப்பிரயாணக் கஷ்டங்களினால் குறைந்த வயதிலேயே இளைப்பாறியுள்ளனர்.

மின்சாரம் இல்லை, எரிபொருளுக்கு பலத்த தட்டுப்பாடு போன்ற காரணங்களால் யாழ். மக்கள் படும் துயரம் சொல்லும் தரமன்று. கஷ்டங்கள் மத்தியிலும் தேசவிடுதலைக்கான உணர்வு அவர்களிடையே வளர்ச்சியடைந்து வருவதனை அவதானிக்க முடிகிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ரி)

**புல்லற உழுதால் நெல் அற விளையும்**

## நியாய விலையில் ரயர், ரியூப்

(உடுவில்)

வட மாகாணச் சுகாதாரச் சேவைகள் திணைக்கள ஊழியர்களுக்கு நியாய விலையில் ரயர், ரியூப்புகள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

சுகாதாரப் பணிப்பாளர் மேற்கொண்ட முயற்சியின் பயனாகச் சுமார் 700 ரயர், ரியூப்புகள் தருவிக்கப்பட்டு, ரயரும், ரியூப்பும் 190 ரூபாவாக விநியோகிக்கப்படுகிறது. (109-ரி)

## இன்று

(உடுவில்)

தேசிய பாடசாலைகளுக்கும் தனியார் பாடசாலைகளுக்கும் இடையிலான வருடாந்த ஆங்கில தினப்போட்டி நிகழ்வுகள் இன்று 13ம் திகதி திங்கட்கிழமை காலை 8-30 மணிக்கு யாழ். சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் நடைபெறும். (109)

* * *

(பண்டத்தரிப்பு)

சொக்கூவில்-மேற்கு சுப்பிரமணிய சுவாமி கோவில் அலங்கார உற்சவத்தை முன்னிட்டு இறுதி உற்சவ தினமான இன்று திங்கட்கிழமை இரவு கலைமணி மார்க்கண்டு சூரியகுமாரியின் இன்னிசை நிகழ்ச்சியும் அறைஞரின் பட்டிமன்றம், வில்லிசை ஆகியனவும் இடம்பெறவுள்ளன. (72, ப 6)

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் இந்துக் கல்லூரியில் உதவிக்கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றிய திரு. அ. ஈஸ்வரநாதன் இரண்டாம் தர அதிபராகப் பதவி உயர்வு பெற்று உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்திற்குச் சென்றமையைப் பாராட்டி உரும்பிராய் இந்துக் கல்லூரி ஆசிரியர் கழகம் பாராட்டு விழா ஒன்றை இன்று திங்கட்கிழமை மேற்படி கல்லூரி மண்டபத்தில் நடாத்துகின்றது.

## இராசிபலன்

13-09-1993

திங்கட்கிழமை

(தமிழுக்கு ஆவணி 28)

துவாதசி பி. ப. 3-54 வரை பூரம் மு. ப. 9-20 வரை இராகுகாலம் காலை 7-33 முதல் 9-03 வரை. சுப நேரம் நண்பகல் 12-03 முதல் 1-33 வரை. சித்தயோகம் கரிநாள் பிரதோச விரதம்.

மேஷம்: காரிய தாமதம், கடினவேலை, பய உணர்வு.

இடபம்: எதிர்ப்புகள் மறைவு, இஷ்டசித்தி, இனிய சுகம்

மிதுனம்: அதைரியம், உறவினர் சங்கடம், அச்சம்.

கடகம்: பந்துஜனசேர்க்கை பணவரவு, புதிய முயற்சி.

சிங்கம்: வீண் ஆலோசனை, சிறு நஷ்டம், சோம்பல்.

கன்னி: அந்நிய சந்திப்பு, நல்லோர் உறவு, புகழ்

துலாம்: துணிச்சல், வெற்றிகரமான முடிவு, தானதர்மம்.

விருச்சிகம்: வீண் சோர்வு, தொழில் பிணக்கு, மனச் சுமை

தனுசு: பிறருக்கு கீழ்படிதல், நிர்ப்பந்தம், வீட்டில் வெறுப்பு.

மகரம்: அதிகாரிகள் சந்திப்பு, தொழில் மந்தம், பயணம்.

கும்பம்: புத்தி சாதுரியம், நண்பர் புகழ், தியானம்.

மீனம்: சுகாரியவேடு, மனக்குழப்பம், விரக்திநிலை,

ஜோஸ்யர்

## வெடிமருந்து, ஆயுதங்களை தமிழகத்தில் குவிக்க

# புலிகள் முயற்சித்து வருகிறார்கள்

### தமிழக அரசு அலட்சியப்படுத்தக்கூடாது

(சென்னை)

தமிழ் நாட்டில் விடுதலைப் புலிகள் ஆயுதங்களையும், வெடி மருந்துப் பொருட்களையும் குவிக்க மேற்கொண்டு வரும் முயற்சிகளை தமிழக அரசு அலட்சியப்படுத்திவிடக் கூடாதென தமிழ்நாடு சட்டப்பேரவை இந்திரா காங்கிரஸ் கட்சித்தலைவர் எஸ்.ஆர். பாலசுப்பிரமணியம் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நேற்று சென்னையில் பத்திரிகையாளர்களிடம் பேசிய அவர் சமீபகாலமாக மாநிலத்தில் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் உத்வேகம் பெற்று வருவதாகவும் கூறினார். மேலும் பூந்தமல்லி சிறைச்சாலை மீது புலிகளின் தற்கொலைப்படை தாக்குதல் நடைபெறலாமென்ற கூற்றையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஏற்கனவே, தமிழகத்தில் புலிகளின் நடமாட்டம் குறித்து அமைச்சர் சுவான் கவலை தெரிவித்ததும் இதற்கு முதல்வர் ஜெயலலிதா மறுப்பு தெரிவித்ததும் குறிப்பிடத்தக்கது. (இ-கி)

## கொழும்பில் விபத்து: எண்மர் உயிரிழப்பு

(கொழும்பு)

கொழும்பு-கண்டி நெடுஞ்சாலையில் யட்டநுவரப் பகுதியில் நேற்று இடம்பெற்ற வீதி விபத்தொன்றில் மூன்று பேர் பலியாகினர் பலர் காயமடைந்தனர்.

தனியார் பஸ் ஒன்றும் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் ஒன்றும் மோதியதாலே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இதேவேளை மற்றுமொரு விபத்தொன்றில் ஐந்து பேர் பலியாகினர். நீர்கொழும்பு போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்சும், தனியார் பஸ்சும் மோதியதாலே இந்தவிபத்து ஏற்பட்டுள்ளது. (ம-கி)

## பொலிஸ் மா அதிபர் ஓய்வு பெறுகிறார்

(கொழும்பு)

பொலிஸ் மா அதிபர் ஏர்னஸ் பெரேரா அடுத்த மாதத்துடன் தமது கடமையிலிருந்து ஓய்வு பெறுகிறார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னோடியாக அவர் ஒரு மாத லீவில் சென்றுள்ளார். பதில் பொலிஸ் மா அதிபராக இரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் பிராங் சில்வா பாதுகாப்பு அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

பொலிஸ் மா அதிபர் ஏர்னஸ் பெரேராவும் ஓய்வு பெறுவதையே விரும்புவதாகவும் அவர் சேவை நீடிப்பை கோரவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. (இ)

★ சர்வதேசத் தலையீடுகள் மூலம்

## எதிர்பாராத முடிவு ஏற்பட முன்

# இனப் பிரச்சினையை தீருங்கள்

(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்சினையில் சர்வதேச ரீதியான அழுத்தத்தின் வேகம் அதிகரித்து வருகிறது. இந்நிலையில் தவறான அல்லது எவரும் எதிர்பாராத ஒரு முடிவுக்கு நாம் தள்ளப்பட முன் எமது பிரச்சினைக்கு தீர்வு காணவேண்டும்.

இவ்வாறு கொழும்பில் தோட்டக் கமிட்டித் தலைவர்கள் மத்தியில் பேசிய அஸீஸ் அமைப்புகளின் தலைவர் திரு. அஷ்ரப் அஸீஸ் தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில்:

போர் மூலமான முடிவே தீர்வு என தீர்மானிக்காது பிற சுமுகமான வழிகளையும் சீர்தூக்கி பார்க்கவேண்டும். இரு பக்க யோசனைகளும் ஒரு மத்தியஸ்தர் சபையின் பரிசீலனைக்கு விடப்பட்டு தீர்வுக்கான முயற்சியை மேற்கொள்ள வேண்டும்.

இந்தப் பிரச்சினை இவ்வளவு மோசமாக மாறியதற்கு காரணம் சுயநல அரசியல் வாதிகள் தான் எனவும் கூறினார். (கி)

## 1,400 பாடசாலைகளில் ஆங்கில ஆசிரியர்கள் இல்லை

(கொழும்பு

நாடளாவிய ரீதியில் 1,400க்கும் மேற்பட்ட பாடசாலைகளில் ஆங்கிலம் போதிக்க ஆசிரியர்கள் இல்லை. மேலும் 800 பாடசாலைகளில் கணித விஞ்ஞான ஆசிரியர்களும் இல்லை என கல்வித் திணைக்கள புள்ளி விபரம் ஒன்று தெரிவித்துள்ளது.

அண்மைக் காலத்தில் 7000 ஆங்கில ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டனர். எனினும் இந்நியமனங்கள் உரிய முறையில் பாடசாலைகளுக்கு கிடைக்காமையே இந்நிலைமைக்கு காரணம் என கல்விச் சேவைகள் ஆணைக்குழுவின் தலைவர் திரு. ஜோர்ஜ் மெண்டிஸ் தெரிவித்துள்ளார். (கி)

★ இன்று ஒப்பந்தம் கைச்சாத்து

# இரு தரப்பு தலைவர்களும் வாஷிங்டன் வந்துசேர்ந்தனர்

(வாஷிங்டன்)

அமெரிக்க தலைநகர் வாஷிங்டனில் இன்று கைச்சாத்திடப்படவுள்ள இஸ்ரவேல் பாலஸ்தீன வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த ஒப்பந்தத்தில் இஸ்ரேல் தரப்பில் இஸ்ரேலிய வெளியுறவு அமைச்சர் சிமோன் பெரஸ் கையொப்பமிடுவார்.

இதற்கிடையில் அமைதி ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் நிகழ்வில் கலந்து கொள்வதற்காக இஸ்ரேலிய பிரதமர் இட்சாக் ரொபின், வெளியுறவுத் துறை அமைச்சர் சிமோன் பெரஸ், பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாசிர் அரபாத் ஆகியோர் வாஷிங்டன் சென்றுள்ளனர்.

மேலும் பி. எல். ஓ. பாலஸ்தீனியர்களை அதிகார பூர்வமாகப் பிரதிநிதித்துவப் படுத்துகிறது என்பதை இஸ்ரேலிய அமைச்சரவை நேற்று முறைப்படி ஏற்றுக் கொண்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

இவ்வொப்பந்தம் கைச்சாத்திடப்பட்டபின் இஸ்ரேல் பிரதமர் இஷாக் ரொபின் பி. எல். ஓ. தலைவர் அரபாத்தை சந்தித்து பேசவுள்ளார். (ஏ-சி)

## 150க்கும் மேற்பட்ட

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆய்வுத்துறையினர் கூறியுள்ளனர்.

இதேவேளை கொழும்பில் ஆளும் கட்சி, எதிர்க்கட்சி முக்கியஸ்தர்கள் உட்பட பல உயர் அதிகாரிகளினதும் பாதுகாப்பும் பெருமளவில் அதிகரிக்கப்பட்டுள்ளதாம். (சி)

## கைத்துப்பாக்கியுடன் அரபாத் பயணம்

(வாஷிங்டன்)

இஸ்ரேலுடன் சமாதான ஒப்பந்தம் செய்ய புறப்பட்ட சமயத்திலும் பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாசிர் அரபாத் தனது கைத்துப்பாக்கியை கொண்டு செல்லத் தவறவில்லையாம்.

மேலும் இவருடன் ரியூனிஸிலிருந்து அமெரிக்கா பயணமாகிய 22 பேரில் அரைவாசிப் பேர் அரபாத்தின் மெய்ப்பாதுகாவலர்கள் ஆவர். ஒப்பந்தம் கைச்சாத்தாகின்ற இறுதி வேளையிலும் கூட தாம் கொல்லப்படலாம் என்ற அச்சத்தினால் அவர் தமது பாதுகாப்பு குறித்து தீவிர கவனம் செலுத்தியிருக்கலாம் என பி.பி.ஸி. தெரிவித்தது. (ஏ-கி)

## ஆந்திராவில் குண்டுவெடிப்பு இரு அதிகாரிகள் பலி

(புதுடில்லி)

ஆந்திரப் பிரதேசம் ஐதராபாத் ரயில் நிலையம் ஒன்றில் குப்பைக்கூடைக்குள் மறைத்து வைக்கப்பட்ட வெடிகுண்டு நேற்று வெடித்ததில் இரு ரயில்வே அதிகாரிகள் ஸ்தலத்தில் கொல்லப்பட்டனர். பலர் படுகாயமடைந்துள்ளனர்

இவ்வெடி குண்டுச் சம்பவத்தின் சூத்திரதாரிகள் யார் என்பது இதுவரையில் கண்டறியப்படவில்லையாயினும் நக்சலைட்டுகள் அண்மையில் ஆந்திரப் பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டதற்கு பழிவாங்கும் விதமாக இக்கொலைச் சம்பவம் இடம் பெற்றிருக்கலாம் என புலனாய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர் (க-இ)

## அமெரிக்க ஹெலி தாக்கு 100 சோமாலியர் பலி

(மொகடிசு)

சோமாலியாவில் அமெரிக்க ஹெலிகொப்டர்கள் மேற்கொண்ட கடும் தாக்குதல்களினால் நூற்றுக்குமேற்பட்ட சோமாலிய மக்கள் கொல்லப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

கொல்லப்பட்டவர்களில் சிறுவர்களும், பெண்களும் பெருமளவில் அடங்குவர் என தெரிவிக்கப்படுகிறது: எனினும் கொல்லப்பட்டவர்கள் தீவிரவாதிகளென அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இதேவேளை சோமாலியாவில் ஐ. நா. படைகளுக்கு எதிரான போராட்டம் வலுவடைந்து வருகிறதாம். (கி-வீ)

## நள்ளிரவு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழர் பெருமளவில் வசிக்கும் கொழும்பு நகர்ப்பகுதியிலும் அதன் சுற்றுப்புறங்களிலுமே இரு நாளும் நள்ளிரவு நேரத்தில் இத்திடீர்ச்சோதனை நடாத்தப்பட்டதாம்.

இதன்போது இளம்பெண்கள் உட்பட பல தமிழ் இளைஞர்களும் கைது செய்யப்பட்டனராம். மேலும் வீட்டுச் சொந்தக்காரர்கள் பலரும் புலிகளுக்கு தங்க இடம் கொடுத்ததாகக்கூறி கைது செய்யப்பட்டுள்ளனர். (சி)

## ஆயுத கொள்வனவு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தளபதி கேள்வி ஒப்பந்தத்தை கோரியுள்ளார்.

ஏற்கனவே இலங்கை படையினருக்கு இராணுவ தளபாடங்களை வழங்கும் நாடுகளை விடவேறு நாட்டு ஆயுத முகவர்களுடனும் இம்முறை அரசு ஆயுத கொள்முதலை செய்யவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## முதுதமிழ் புலவர்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

மதுரைத் தென்னிந்தியத் தமிழ்ச் சங்கத்தால் முதுதமிழ்ப் புலவர் என்னும் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது இவரது சிறந்த புலமைக்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

பைந்தமிழ் பாடிய பாவலனை நாளும் பசிநினில் ஏத்துவது நந்தமிழ் மாந்தரின் நற்பணியே எனக் கொண்டு முதுதமிழ்ப் புலவர் மு. நல்லதம்பி போன்றோரை நாம் என்றும் நினைவு கூருதல் நம் தலையாய கடனாகும்.

கதிர். சரவணபவன்

## ஏழாலை

1-ம் பக்கத் தொடர்ச்சி

குண்டுகளில் இப்பகுதி அதிர்ந்ததாகவும் ஆயினும் இப்பகுதியிலிருந்து பொதுமக்கள் ஏற்கனவே வெளியேறியபடியால் உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லை

தாக்குதல் நடைபெறுவதற்கு சில மணி நேரத்திற்கு முன்னர் ஹெலிகொப்டர் ஒன்று இப்பகுதியை வட்டமிட்டுச் சென்றதும் குறிப்பிடத்தக்கது. (56-ஏ-கி)

## இன்றைய உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் நடாத்திவரும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் இன்றைய ஆட்டத்தில் பாடும் மீன் கழகமும் யங்ஸ்ரேயர்ஸ் கழகமும் மோதுகின்றன. (வி-சி)

## கடல் எல்லை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பொறுப்பு இந்திய கடற்படைக்கு இருப்பதாகவும் அட்மிரல் தெரிவித்தார்.

இதேவேளை இதே போன்ற ஒப்பந்தங்களை இந்திய அரசு மியான்மர் (பர்மா). தாய்லாந்து, இந்தோனேஷியா, மலேசியா போன்ற நாடுகளுடனும் செய்திருப்பதாகவும் கடற்படைத்தளபதி நேற்று விசாகப்பட்டினத்தில் தெரிவித்தார். (இ-கி)

## புலிகளின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இச்சிறைச்சாலையை புலிகளின் தற்கொலைப்படையினர் தகர்த்து மேற்படி கைதிகளை விடுவிக்க முயற்சிகள் மேற்கொள்ளக் கூடுமென தகவல் கிடைத்திருப்பதாக தமிழக அரசு வழக்கறிஞர் ராஜீவ் கொலை வழக்கு விசாரணையின் போது தெரிவித்துள்ளார்.

இதையடுத்து சிறைச்சாலையினதும் வழக்கறிஞர்களதும் பாதுகாப்பும் அதிகரிக்கப்பட்டுள்ளதாம். (கி-இ)

## புலிகள்-இராணுவம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

காலை 10-30 மணியளவில் ஷெல் தாக்குதல் மற்றும் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டவாறு முன்னேற முயன்ற படையினரையே விடுதலைப்புலிகள் உக்கிர தாக்குதலை மேற்கொண்டு நிலைகுலையச் செய்தனர். இதனையடுத்து படையினர் தமது பழைய நிலைகளுக்குத் திரும்பினர்.

இம்மோதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் எதுவிதசேதமும் ஏற்படவில்லை. எனினும் படையினர் தரப்பில் ஏற்பட்ட சேதங்கள் குறித்த தகவலெதுவும் இதுவரையில் கிடைக்கவில்லை. (க-கி)

## குழந்தைகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வீதம் குழந்தைகள் பிறப்பு விகிதங்கள் அமைந்துள்ளன.

இதேவேளை இலங்கையில் குழந்தைகள் இறப்பு விகிதம் 1000 குழந்தைகளுக்கு 25 ஆக இருக்கின்றது என்றும் அந்த நிறுவனத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-கி)

## நாட்டில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வித்துள்ளார்.

இலங்கை அரசின் ஆலோசகர்கள் பலருடன் நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்தும் நோக்கில் பல கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்

இப்பிரச்சினைக்கு அரசே முழுப்பொறுப்பையும் ஏற்று இதனை தீர்க்க முழுமுயற்சிகளையும் மேற்கொள்ளவேண்டுமெனவும் கூறியுள்ளார். (கி)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1993-ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 13-ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office, Sri Lanka under Licenee Number B/10 336/B: